## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.104/2015

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு நவம்பர் மாதம் 05 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராம்பிரபு | மதம் | : இந்து |
| த/பெ | : சண்முகம் | ஜாதி | : -- |
| வயது | : 34 | கிராமம் | : திருமழிசை |
| தொழில் | : சுயதொழில் | வட்டம் | : பூந்தமல்லி |

**05.11.2025**

**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு சொத்திற்கு கிரையஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது பெரியம்மாவுக்கு எனது அப்பா எழுதி கொடுத்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். அது கிரையஆவணமா என்றால் இல்லை. நான் வழக்கு சொத்திற்கு எங்கள் உரிமையைகாட்ட ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்லும் இடத்திற்கு பெயர் செங்குந்தர் நகர் என்றால் இல்லை. சுப்பிரமணிய நகர் ஆகும். செங்குந்தர் நகரில் எத்தனை குடும்பங்கள் இருக்கும் என்றால் 50 குடும்பங்கள் இருக்கலாம். சரியாக தெரியாது.

2. வழக்கு தாக்கல் செய்துள்ள உகேந்திரசிம்மன், ராணி, நாகரத்தினம், குமாரவேலு, ஜெயலட்சுமி, உகந்தர் ஆகியோரை தெரியுமா என்றால் தெரியும். அவர்கள் எங்கு குடியுள்ளார்கள் என்றால் உகேந்திரசிம்மன், ராணி, நாகரத்தினம் செங்குந்தர் நகரில் குடியிருக்கிறார்கள். குமாரவேலு, ஜெயலட்சுமி, உகந்தர் ஆகியோர் சுப்பிரமணிய நகரில் குடியிருக்கிறார்கள். நான் தாக்கல் செய்துள்ள பிவாசாஆ 5 பட்டா எண் 944 ல் உள்ள சண்முகம் எனது அப்பா என்றால் சரிதான். பிவாசாஆ 5 பட்டாவில் நரசிம்மரெட்டி யார் என்றால் எனக்கு தெரியாது. பிவாசாஆ 5 பட்டா கிராமநத்த பட்டாவா அல்லது ஊரகபட்டாவா என்றால் எனக்கு தெரியாது. மனைபிரிவாக

பிரிக்கப்பட்டு அனைவருக்கும் விற்கப்பட்ட பின்பு நரசிம்மன் பெயருடன் எனது அப்பா பெயரை மோசடியாக சேர்த்து பட்டாவை தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் மோசடி யாரும் தாக்கல் செய்யவில்லை. பிவாசாஆ 5 பட்டா 06.12.2001 ல் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு முன்பே பட்டா பாஸ்புத்தகம் உள்ளது.

3. பிவாசாஆ 6 பட்டா பாஸ்புத்தகம் 19.07.1988 ல் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பட்டா எண் 944 ல் நரசிம்மரெட்டி, சண்முகம் மனைவி தேவகி பெயரில் பிவாசாஆ 6 பட்டா உள்ளது என்றால் சரிதான். பிவாசாஆ 5 பட்டாவில் புலஎண் 22/18A1 ல் 8 ஏர்ஸ் அதாவது 20 சென்ட் என உள்ளது என்றால் 20 சென்ட் என்ற அளவு பற்றிய விவரம் எனக்கு தெரியாது. பிவாசாஆ 6 பட்டாவில் புலஎண் 22/18A1 ல் 8 ஏர்ஸ் என்று தான் உள்ளது என்றாலும் அதாவது 20 சென்ட் என உள்ளது என்றாலும் எனக்கு அந்த அளவு பற்றிய விவரம் தெரியாது.

4. அதே பிவாசாஆ 6 ல் அதே புலஎண்ணுக்கு அடுத்த பக்கத்தில் 656 சதுர அடி கிரையம் என உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிவாசாஆ 1 ஆனது எனது அப்பா தாக்கல் செய்த முன்வழக்கின் தீர்ப்பாணை என்றால் சரிதான். பிவாசாஆ 1 தீர்ப்பாணையில் சொத்துவிவரமே இல்லை என்றால் இருக்கும். நான் சொல்வது தவறு என்றாலும் பிவாசாஆ 1 தீர்ப்பாணையில் சொத்துவிவரமே இல்லை என்றாலும் சரியல்ல. பிவாசாஆ 1 தீர்ப்பாணையில் B அட்டவணை பொறுத்து விளம்புகை மற்றும் ஒப்படைப்பு பரிகாரம் கோரப்பட்டு இருப்பதில் B அட்டவணை சொத்தில் ஏதேனும் ஆக்கிரம்பு இருந்திருக்கும் என்றால் செங்குந்தர்நகரில் உள்ளவர்களும் கவுன்சிலரும் அடாவடியாக போட்ட சாலையை அப்புறப்படுத்த அந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. பிவாசாஆ 1 வழக்கில் செங்குந்தர் நகரில் உள்ள பொதுமக்கள் தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றால் அவர்கள் சார்பாக தான் கவுன்சிலர்மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. உகேந்திரசிம்மன், ராணி, நாகரத்தினம் செங்குந்தர் நகரில் குடியிருப்பதை காட்ட பதிவு செய்த ஆவணங்கள் தாக்கல் செய்துஇருப்பதில் நான் சொத்து என்னுடையது என்பதை காட்ட பதிவு செய்த ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கை சொத்தை பொறுத்து நான் கிரைய ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பிவாசாஆ 1 தீர்ப்பாணை, பிவாசாஆ 5 பட்டா பிவாசாஆ 6 பட்டா, பிவாசாஆ 2

செட்டில்மென்ட் ஆவணம் ஆகியவை இந்த வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட ஆவணங்கள் என்றாலும் அது வழக்கு சொத்தில் உங்கள் உரிமையை காட்டும் ஆவணம் என்றாலும் சரியல்ல.

6. செங்குந்தர் நகர் பைபாஸ் சாலை பாண்டியன் தெருவில் 12 அடி கிழக்கு மேற்கு 41 அடி வடக்கு தெற்கு மொத்தம் 492 சதுரடி இடத்தை ஆக்கிரமத்து தகர சீட் போட்டுள்ளோம் என்றால் இல்லை. அங்கு எங்கள் வீடு உள்ளது. நாங்கள் ஆக்கிரமிப்பு செய்யவில்லை. நீதிமன்ற ஆணையர் அந்த வழக்கு சொத்தை அளவீடு செய்தாரா என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கை மற்றும் வரைபடத்தில் தகரசீட் போட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் இல்லை. 20 அடி வீதியில் 12 அடியை நாங்கள் ஆக்கிரமிப்பு செய்து கட்டுமாணம் கட்டியுள்ளோம் என்றாலும் மீதி 8 அடி தான் தற்போது பாதை உள்ளது என்றாலும் நாங்கள் ஆக்கிரமிப்பு செய்யவில்லை.

7. அங்கு 20 அடி சாலை உள்ளதா என்றால் செங்குந்தர் நகரிலேயே 20 அடி சாலை இல்லை. நாங்கள் யாரிடமும் முறையாக கிரையம் பெறாமல் ஆக்கிரமிப்பு செய்துகொண்டு அங்குள்ளவர்களிடம் பிரச்சனை செய்துவருகிறோம் என்றால் நாங்கள் எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை. வாதி கோரியபடி தீர்ப்பு செய்யதக்கது என்றால் சரியல்ல.

(மறுவிசாரணை இல்லை.)